2018 ஜூன் 28] [திரு. மு.க. ஸ்டாலின்]

ஏற்றுக்கொள்கிறேன், அதில் நான் கருத்து மாறுபாடு கொள்ள விரும்பவில்லை. நான் கேட்கிற கேள்வி, இதே அவையிலே, இரண்டு மசோதாக்கள், ஏகமனதாக, ஒருமனதாக 1–2–2017 அன்று நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதி அவர்களின் ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. அவை எந்த நிலையில் இருக்கின்றன? அதுகுறித்து இந்த அரசு விளக்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனாதிபதி அவர்கள், அதை* withheld *செய்து வைத்திருக்கிறார். அந்தத் தகவல் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. "ஏன்* withheld *செய்யப்பட்டுள்ளது?" என்று நம்முடைய அரசின் சார்பில் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.* (குறுக்கீடு)

முற்பகல் 11–35

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, உட்காருங்கள்.* (குறுக்கீடு) *நீங்கள் உட்காருங்கள்.* (குறுக்கீடு) *திரு. பழனிவேல் தியாக ராஜன், உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார். அமைச்சர் அதற்குப் பதில் சொல்லிவிட்டார். நீங்கள் தனியாக எல்லாம் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தால், நான் எப்படி சபையை நடத்துவது?* (குறுக்கீடு) *அதற்கெல்லாம் நீங்கள் என்னிடம் அனுமதி கேட்டுவிட்டு* raise *செய்ய வேண்டும்.* (குறுக்கீடு) *இல்லை, இல்லை.* zero hour*–ல்* raise *செய்வது என்றால், அது என்னவென்பது எனக்குத் தெரிய வேண்டுமல்லவா!* (குறுக்கீடு) *இல்லை, இல்லை. நீங்கள்* English*–ல் கேட்டால்கூட அமைச்சர் பதில் சொல்வார்.* (குறுக்கீடு) *இல்லை, அதற்கெல்லாம் என்னிடம் விவரம் இல்லை, உட்காருங்கள்.* (குறுக்கீடு) *அதெல்லாம் நீங்கள் முதலிலேயே கேட்டிருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக், பேசுங்கள்.* (குறுக்கீடு) *திரு. கிரி, உட்காருங்கள்.*